நில உடைமை பதிவு மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண் 24.—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் சர்வே கற்களை நட்டால், நில அளவை அலுவலர்கள் இருக்கும் போதே நான்கு எல்லைகளை அழிக்கும் நோக்கத்துடன் நடப்பட்ட சர்வே கற்களை அகற்றுவதை தடுக்க அரசு கடுமையான சட்டம் கொண்டு வருமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பட்ட நில அளவை கற்களை அகற்றுவது குற்றமாகும். இதுகுறித்து 1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 8 ஆவது பகுதி 15-ன் கீழ் சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் இவ்விதம் செய்தால் அவர்களே பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்று சட்டம் போடப்பட்டிருக்கிறது. இப்படி இப்போது யாராவது செய்தால், 1860 ஆம் வருடத்திய இந்திய பீனல் கோடு செக்ஷன் 434-ன்படி குற்றமாகும். அப்படி குற்றம் செய்தவர்களுக்கு ஒரு வருட கால சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தனித் தனியாக விதிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. புதிதாகச் சட்டம் தேவையில்லை.

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1923 வது ஆண்டு சட்டம் 'மெட்ராஸ் சர்வே அண்டு பவுண்டரி ஆக்ட்' ஆகும். அதன்பிரகாரம் செக்ஷன் 16, செக்ஷன் 21படி வில்லேஜ் ஆபீசர்கள், கிராம அதிகாரிகள் இந்த எல்லையைக் காட்டக்கூடிய கற்களை அப்புறப்படுத்தினால், ரிப்போர்ட் செய்ய வேண்டுமென்றுதான் இருக்கிறது. இதிலே அப்படி ரிப்போர்ட் செய்தால், அந்த ரிப்போர்ட் மீது யார் நடவடிக்கை எடுப்பது என்பது சந்தேகம். அது மாத்திரமில்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தியன் பீனல் கோடு செக்ஷன் 434ன்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 434வது செக்ஷன் நான்—காக்னிசபிள் ஆகும். சர்வேயர் ரிப்போர்ட் செய்தாலும், கிராம அதிகாரி ரிப்போர்ட் செய்தாலும் போலீஸ் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது, நடைமுறையில் பணக்காரர்களும், பலவான்களும் சாதாரண ஏழைகளிடம் இதுமாதிரி கற்களை அகற்றும் போது, அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, சாதாரண ஏழைகள், அல்லது மத்தியதர வகுப்பினர், விவசாயிகள் ஆகியோர்களைக்

காப்பாற்றுவதற்காக பஞ்சாப் மாநிலத்தில் உள்ளதுபோல் எல்லைக்கோட்டை மாற்றுவது, எல்லைக்கோட்டு கற்களை அகற்றுவது போன்றவற்றிற்கு கடும் தண்டனை விதிக்கப் படுகிறது. அதுபோல், சர்வே அண்ட் பவுண்டரிஸ் ஆக்ட் செக்ஷனிலே மாற்றம் செய்து கடுந் தண்டனை அளிப்பதற்கு இந்த அரசு சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சட்டப்படி கிராம அதிகாரிகள் ரிப்போர்ட் செய்தாலே போதும் என்றிருப்பது உண்மைதான். ஆனால், அவர்கள் சொல்லுகிறபடி செக்ஷன் 434-ல் தண்டனை விதிப் பதற்கு அதிகாரம் இருக்கிறது என்பதும் உண்மைதான். இது போதவில்லை என்று அவர்கள் சொல்வதாலே, மீண்டும் இது பற்றி சட்டத் துறையோடு ஆராய்ந்து, தேவைப்பட்டால் அதற்கான சட்ட முன்வடிவு கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எல்லைக்கோடு சம்பந்தமாக பெரும்பாலும் எல்லைக் கற்களை பிடுங்கி எறிந்தவுடன் காவலர்களிடம் சொல்கின்றபோது, காவல்துறையிலே உள்ளவர்கள் இது சிவில் விவகாரம், நாங்கள் தலையிட முடியாது என்று கூறுகின்ற காரணத்தினால், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத் திருக்கக்கூடிய சிறிய விவசாயிகள் பெரும்பாலும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, இதை உடனடியாகச் செய்வதற்கு இந்தச் சட்டத்தை திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி முன்பே நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்து விட்டேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வேயர் அளக்கின்றபோதே தவறான முறையில் அளந்து கற்கள் நடப்படுகிறது. மீண்டும் அந்த தவறைச் சுட்டிக் காட்டுகின்றபோது, ஏற்கனவே பழைய நிலையிலே அளந்து, அதே தவறைச் செய்கிறார்கள். அதை ரிப்போர்ட் செய்கின்றபோது, அதனால் பல விளைவுகள் ஏற்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, இப்படிப்பட்ட தவறைச் செய்யக்கூடிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வே எண் அல்லது கல் நடுவதற்கு முன்னால், அது சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதைச் சரிபார்த்து சரியாக அளந்து தான் அந்தக் கற்கள் நடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக கற்கள் நடப்படுவதில்லை. எங்காவது தவறு ஏற்பட்டால், அதைத் திருத்திக் கொள்வதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம். இப்படிப் பொதுவாகச் சொல்வதைவிட உதாரணமாக இந்த இந்த இடத்தில் இப்படி இப்படியெல்லாம் தவறு நடந்திருக்கிறது என்பதை எடுத்து, நீங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அது சரியா இல்லையா என்பதை ஆராய்ந்து, அது தவறுதான் என்று தெரிந்தால், தவறு வருவதற்குக் காரணம் என்ன, அதற்கான அடிப்படையைக் கண்டுபிடித்து, அப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடைபெறமால் இருக்க நடவடிக்கை எடுப்பதற்கும், அப்பேர்ப்பட்ட தவறுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண் 25—திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு பூராவும் இரண்டாண்டில் தமிழக அரசு அமுல் படுத்துவதால் வேலை வாய்ப்புக்களும் பதவி உயர்வும் ஏற்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) சர்வே பயிற்சிக்கு தனியே கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ, ஆ மற்றும் இ.) பேரவைத் தலைவர் அவர்களே, நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதை செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2, 3 ஆண்டுகளில் வேலை முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் மொத்தம் புதியதாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்? அதனால் எத்தனை பேர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?